உலகப் பொதுமறை

# வள்ளுவம்

## தொகுதி–2




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

புலவர் **தீ.விஜயசுதா**

முனைவர் **பா.இராஜ்குமார்**

பேராசிரியர் **க.கருத்தபாண்டி**

திருமதி. **பாரதி அனிதன்**

எழுத்தர் **க.முருகன்**

கவிஞர் **ந.கு.முல்லைச் செல்வன்**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் – மலேசியா.**

---

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-11

# திருக்குறள் கூறும் பிரபஞ்சவியற் சிந்தனைகள் ஓர் மெய்யியற் பகுப்பாய்வு

**10**

திரு.சி.நிரோசன்

## ஆய்வுச் சுருக்கம்

*மனிதன் தன்னைப் பற்றியும், தன்னைச் சூழவுள்ள பிரபஞ்சம், இயற்கை குறித்தும் சிந்திக்கத் தொடங்கியது முதல் மெய்யியற் சிந்தனைகள் தோற்றம் பெற்றன என்பர். இதனாலே தான் பிரபஞ்சம் குறித்து சிந்தித்த தேலிஸ், அனெக்ஸிமாந்தர், அனெக்ஸிமினிஸ் ஆகிய மூவரும் இயற்கை மெய்யியலாளர்கள் என்றும், முதல் மெய்யியலாளர்கள் என்றும் வழங்கப்படுகின்றனர். கீழைத்தேயத்தில் இந்திய சிந்தனை மரபின் மூல ஊற்றுக்களாக விளங்கும் வேத உபநிடதங்கள் சமயத்தோடு இணைந்த வகையில் பிரபஞ்சம் குறித்த மெய்யியற் சிந்தனைகளை வெளிப்படுத்தி நின்றன. இந்த வகையில் தமிழர் சிந்தனை மரபினை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் நூல்களில் முதன்மை நூல் என்று கருதப்படக்கூடிய திருக்குறளும் பிரபஞ்சம் குறித்த சிந்தனைகளை இன்றைய அறிவியலுக்கு நிகராக வெளிப்படுத்தி நின்றது. நேரடியாகவும், உவமை; உருவகங்களாக மறைமுகமாகவும் திருக்குறள் வெளிப்படுத்தி நின்ற ஆழமான பிரபஞ்சவியற் சிந்தனைகளை பகுப்பாய்வு செய்து அவற்றின் சிறப்பினை எடுத்துக்காட்டுவதே இவ் ஆய்வின் குறிக்கோளாகும். இவ் ஆய்விற்கான தரவுகள் திருக்குறள் மூல நூலில் இருந்தும், திருக்குறளில் பிரபஞ்சவியல் சார்ந்து வெளியிடப்பட்ட நூல்கள், கட்டுரைகளில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. மேலும் இவ் ஆய்வானது பகுப்பாய்வு முறை, விபரண முறை, ஒப்பீட்டு முறை என்பவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*பிரதான சொற்கள்: திருக்குறள், பிரபஞ்சம், உலகம், சந்திரன், சூரியன்.*

## அறிமுகம்

திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய அருங்குறட்பாக்கள் அனைத்துமே ஒப்பற்ற கருத்துக் கருவூலங்களை கொண்டுள்ளன.

இவை பல்வேறு அறிவுத்துறைகள் குறித்த கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டிருக்கின்றன. இதனாலே தான் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறள் இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் இன்னும் ஓர் பொதுமறையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய திருக்குறளின் பொருட்சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ்நாகனார், “எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லைஞ்” என்றவாறாக திருக்குறளை சிறப்பிக்கின்றார். மேலும் “அறிவியல் அணுகுமுறைகளுக்கு வள்ளுவம் வளைந்து கொடுப்பதனாலேயே காலத்தை வென்று கறை படியாமல், இன்றளவும் நின்று ஒளிர்கின்றது” என்றும், திருவள்ளுவர் கண்டது அறவியல் மட்டுமல்ல குன்றாத அறிவியலும் ஆகும்” என்றும் குறிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் பிரபஞ் சவியல் குறித்தும் பல்வேறு கருத்தாக்கங்களை திருக்குறளில் கண்டு கொள்ள முடிகின்றது.

## ஆய்வின் நோக்கம்

திருக்குறளில் கூறப்பட்டுள்ள பிரபஞ்சவியற் சிந்தனைகளை பகுப்பாய்வு செய்து, அவை இக்கால அறிவியல் வளர்ச்சி கண்ட பிரபஞ்சவியற் கண்டுபிடிப்புக்களும் சிந்தனைகளும் ஏலவே திருக்குறளில் உரைக்கப்பட்டுள்ள தன்மையினை விபரிப்பதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

## ஆய்வின் கருதுகோள்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருக்குறளில் குறிப்பிடப்பட்ட பிரபஞ்சவியற் சிந்தனைகள் வெறுமனே அவரது நம்பிக்கைகளோ அன்றி, ஐதீகங்களோ அல்ல. அவை காலத்தை வென்ற அறிவியல் உண்மைகளாகும் என்பதும், அவை இக்கால அறிவியற் சிந்தனைகளுக்கு இயைபுடையன என்பதும் இவ் ஆய்வின் கருதுகோள்களாகும்.

## முறையியலும் தரவு சேகரித்தலும்

இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத் தரவாக திருக்குறள் மூல நூலும், இரண்டாம் நிலைத்தரவுகளாக திருக்குறள் கூறும் பிரபஞ் சவியற் சிந்தனைகள் சார்ந்து வெளிவந்த நூல்கள், கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வில் திருக்குறளைப் பகுப்பாய்வு செய்யும் வகையில் பகுப்பாய்வு முறையும், திருக்குறளின்

பல்வேறு பகுதிகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் விபரண முறையும், திருக்குறள் கூறும் பிரபஞ்சவியற் சிந்தனைகளையும், இக்கால பிரபஞ்சவியற் சிந்தனைகளையும் ஒப்பிட்டு ஆராயும் வகையில் ஒப்பீட்டு முறையும் பயன்படுத்தப்பட்டன.

## பகுப்பாய்வு

பிரபஞ்சவியல் என்பது பிரபஞ்சத்தின் தோற்றம், இயக்கம், கட்டமைப்பு, பரிணாமம் ஆகியவற்றை ஆராய்கின்ற ஓர் இயல்" என்றவாறாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. பொதுவாக பிரபஞ்சவியல் இரண்டு வகையாக வகைப்படுத்தப்படுகின்றது.

1. இயற்பு அண்டவியல் விஞ்ஞானிகளால் ஆராயப்பட்டு உருவாக்கப்பட்ட கொள்கைகளை உள்ளடக்கியது.

2. பௌதீக அதீத பிரபஞ்சவியல் மதங்களின் கொள்கைகள் சார்ந்த கோட்பாடுகளைக் கொண்டது

பிரபஞ்சவியல் குறித்த சிந்தனை கிரேக்க காலம் முதல் இடம் பெற்றிருந்ததனைக் காணலாம். குறிப்பாக கிரேக்கத்தின் முதன் மெய்யியலாளர்கள் என வர்ணிக்கப்படும் தேலிஸ், அனெக்ஸிமாந்தர், அனெக்ஸிமினிஸ் போன்றோரது சிந்தனைகள் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றியதாக அதாவது பிரபஞ்சத்தின் மூலக்கூறு யாது என்பது பற்றியதாகவே அமைந்திருந்தன. தேலிஸ் நீர் என்றும், அனெக்ஸிமாந்தர் எல்லையற்ற வேறுபாடு என்றும், அனெக்ஸிமினிஸ் காற்று என்றும் பிரபஞ்சத்தின் மூலக்கூறினை அடையாளப்படுத்தினர். நவீன காலத்தில் பிரபஞ்சம் குறித்து பேரண்ட வெடிப்புக் கொள்கை, குவிவு விரிவுக் கொள்கை, நிலையிருப்புக் கொள்கை போன்ற பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. மேலும் பிரபஞ்ச ஊசலாடல் கொள்கை போன்று கொள்கைள் பிரபஞ்சத்தின் இயல்பினை விளக்குகின்றன.

கீழைத்தேயத்தில் குறிப்பாக இந்திய தர்சனங்களில் இறையியல் சார்ந்ததாகவே பெரும்பாலும் பிரபஞ்சவியற் கருத்துக்கள் எடுத்தாளப்படுகின்றன. பெரும்பாலான இந்திய தர்சனங்கள் உலகு இறைவனால் படைக்கப்பட்டதாக எடுத்தாள்வதுடன், மேலுலகம்,

பூவுலகம், பாதாள உலகம் என மூவகை உலகு இருப்பதாகவும் எடுத்தாள்கின்றன. இன்று அறிவியலில் வேகமான வளர்ச்சியினால் உலகம் சுருங்கி உள்ளங்கையினுள் அடங்கிவிடுகின்றது. அறிவியல் நுட்பங்கள் பெருகப் பெருக நாம் வாழும் இவ்வுலகை பல்வேறு பகுதிகளாக பகுத்து அறிய வாய்ப்புக்களும் பெருகி வருகின்றன. இவ்வுலக உருண்டைக்கு வெகுதொலைவில் இருந்து கொண்டே அதன் முழு அமைப்பை ஆராயவும் மனிதர்களுக்கு வாய்ப்புக்கள் வாய்த்துள்ளன.

வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் அறிவியல் இந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. உலகம் முழுவதையும் அன்றை மக்கள் தெளிவாக அறிந்திருப்பார்களா? என்பதே பெரிதும் ஐயத்திற்கு உரிய ஒன்றாகும். உலகின் ஒரு சில பகுதிகளையும், ஒரு சில மக்கள் இனங்களையும் பற்றியுமே அவர்கள் அறிந்திருக்க வாய்ப்புண்டு. அத்தகையதொரு காலத்தில் தோற்றம் பெற்ற திருக்குறளில் சில குறட்பாக்கள் உலக முழுமையின் இயல்புகளை வெளிப்படுத்தியிருந்தன.

உலக உருண்டையில் நிலப்பகுதி, நீர்ப்பகுதி ஆகிய பகுதிகள் உள்ளது என்பதும், நீர்ப்பகுதி நிலப்பகுதியை விட கூடுதலானது என்பதும், நிலப்பகுதி கடலால் சூழப்பட்டிருந்தது என்பதும் திருக்குறளில் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. "விண்ணின்று பொய்ப்பின்... *0213*", "கூறாமை நோக்கின் குறிப்பறிவான்ஞ். *71701*" போன்று குறள்களில் வருகின்ற விரிநீர் வியனுலகம், மாறாநீர் வையம் போன்ற சொற்றொடர்கள் இவ்வுலகம் கடலால் சூழப்பட்டது என்பதனை தெளிவுபடுத்துகின்றன.

மேலும் இப்பூவுலகின் சிறப்பான இயல்புகளில் ஒன்ற காற்று வீசும் வளத்தினைக் கொண்டிருத்தலாகும். இவ்வளத்தினைக் கொண்டிருப்பதனாலேயே இப்பூவுலகம் ஏனைய கோள்களை விட சிறப்பானதாக விளங்குகின்றது. இதனை "அல்லல் அருள்ஆள்வார்க்கு... *25245*" என்ற குறளில் வருகின்ற 'வளிவழங்கும் மல்லல் மாஞாலம்' என்ற சொற்றொடர் விளக்கி நிற்கின்றது. மேலும் "ஈர்ங்கண்மா ஞாலம் (*1061058*)" போன்ற சொற்றொடர்கள் உலகம் முழுமைக்கும் உரிய ஒரு சில இயல்புகளை வெளிப்படுத்துகின்றன.

மேலும் ஏலவே குறிப்பிட்டது போன்று இந்திய தத்துவ தர்சனங்களில் பெரும்பாலும் எடுத்தாளப்படுகின்ற மூவகை உலகு பற்றிய கருத்தாக்கங்களும் திருக்குறளினிலே எடுத்தாளப்படுகின்றன. இத்தகைய கருத்தாக்கங்கள் பிரபஞ்சவியலின் வகைகளில் ஒன்றான பௌதீக அதீத பிரபஞ்சவியல் சார்ந்த கருத்தாக்கங்களாக அமைகின்றன. தேவர்கள் வாழும் ஓர் உலகிருப்பதாகக் கொண்டு அதனை மேலுலகம் என்று வழங்குவர். இதனையே வானோர் உலகம், வானுலகம், புத்தேளுலகம் என வள்ளுவர் வழங்குகின்றார். அசுரர்கள் வாழும் ஓர் உலகிருப்பதாகக் கொண்டு அதனை கீழுலகம் என்று வழங்குவர். இதனையே நரகம், அளறு என்று மறுபெயர்களிட்டும் அழைப்பர். மக்கள் வாழும் இவ்வுலகினை உலகம், ஞாலம், வையம், நிலம், மாநிலம் என்னும் பல்வேறு பெயர்களால் வழங்குவர்.

மேலுலகம், உலகம், கீழுலகம் என உலகை மூன்றாக பாகுபடுத்திக் காணுவதனால் பிரபஞ்சத்தினைக் கூறுபடுத்தி கருதியிருக்கின்றனர் என்பது தெளிவு. இத்தகைய நிலைப்பாட்டினை திருக்குறளிலும் தெளிவாகக் காணலாம். இதனை "செய்யாமற் செய்த உதவிக்கு....", "புத்தே ளுலகத்தும் ஈண்டும் ..... 22 213", "அருளில்லார்க்(கு) அவ்வுலகம் இல்லை.... 25247", "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு.... போன்ற குறட்பாக்களிலே இடம்பெறுகின்ற அவ்வுலகம் இவ்வுலகம்; வையகம் வானகம்; புத்தேளுலகம்; வையம் வானம் போன்ற தொடர்கள் வள்ளுவர் மூலகத்தினை ஏற்று இப்பிரபஞ்சத்தினை கூறுபடுத்தி நோக்கியுள்ளார் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றன.

மேலும் வள்ளுவர் உலகு என்ற சொல் மூலம் சில சந்தர்ப்பங்களில் உலகின் ஒரு பகுதியையும், சில சந்தர்ப்பங்களில் உலகின் முழுமையையும் கருத்திற் கொண்டுள்ளார் என்பதனையும் அவதானிக்க முடிகின்றது. "...அடிதழீஇ நிற்கும் உலகு (55544)" என்ற குறளில் வள்ளுவர் உலகின் ஒரு பகுதியை அதாவது மன்னனின் ஆட்சிக்குரிய பகுதியைக் கருத்திற் கொண்டுள்ளார் என்பதும், "..... ஞாலத்தின் மாணப் பெரிது" என்ற குறளில் உலக முழுமையையும் அதாவது உலகம் மிகப்பெரியது என்றவகையிலும் எடுத்தாண்டுள்ளமை கண்டுகொள்ளத்தக்கது.

"பொருளில் உள்ள இயக்கத்தினால் அது தொடர்ச்சியாக

மாற்றமுறுகின்றது” என்பதனை இயக்கவியல் தத்தவம் வெளிப்படுத்துகின்றது. அவ்வாறே சூரியனைப் பூமி சுற்றும் பொழுது பூமிக்கடியில் ‘தட்பவெப்ப’ நிலையில் மாறுதல்கள் ஏற்படுகின்றது என்கின்றார்கள். இன்னும் பூமிக்குள் நம் கண்களுக்குப் புலப்படாத எத்தனையோ மாறுதல்கள் ஏற்படுகின்றன என்கின்றார்கள். இதனையே ஹெராக்ளிட்டஸ் “உலகில் மாறுதலைத் தவிர நிலையானது ஒன்றும் இல்லை” என்றார். எனவே இவற்றை நோக்குமிடத்து உலகம் தொடர்ச்சியான இயக்கமுடையது என்பது தெளிவாகின்றது. இத்தகைய உலகின் இயங்கியல் தத்துவத்தை வள்ளுவரது குறட்பாக்களிலும் கண்டுகொள்ள முடிகின்றது. “எவ்வ துறைவது உலகம்”, “உலகத்தோடு ஒட்ட ஒழுகல் போன்ற குறட்பாக்கள் உலகம் தொடர்ச்சியான இயக்கமுடையது என்ற கருத்தில் இயக்கவியல் தத்துவத்தை வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். மேற்கூறப்பட்ட குறளிலே உறைவது உலகம் என்ற சொற்றொடர் உலகம் இயங்கிக் கொண்டிருப்பதனைக் குறிக்கின்றது. பூமி தன்னைத் தானே சுற்றி, சூரியனையும் சுற்றி வலம் வருகின்றது. இத்தகைய பிரபஞ்சவியற் சிந்தனை வள்ளுவரின் குறட்பாக்களிலே பொதிந்து கிடப்பதனைக் காணலாம்.

மேலும் இவ்வுலக இயக்கத்திற்கும், உயிர் வாழ்க்கைக்கும் நீர் இன்றியமையாதது. எனவே மழை இன்றியமையாத ஒன்று என்பதனையும் அறிய முடிகின்றது. நீர் இல்லாதவிடத்து இப்பூமியில் எந்தவொரு மனிதனோ, விலங்கோ, தாவரங்களோ நின்று நிலைக்க முடியாது. இத்தகைய மழையின் இன்றியமையாமையை அதாவது நீரின் இன்றியமையாமையை வள்ளுவரின் பல்வேறு குறட்பாக்களும் வலியுறுத்தி நிற்கின்றன. “நீரின்றி அமையாது உலகெனின் “விண்ணின்று பொய்ப்பின்....”, “சிறப்பொடு பூசனை...”, “வானோக்கி வாழும்....” போன்ற குறட்பாக்கள் உலக இயக்கத்திற்கும், உயிர் வாழ்க்கைக்கும் நீரின் குறிப்பாக மழை நீரின் இன்றியமையாமையை வலியுறுத்தி நிற்கின்றன.

உலகம் என்பது உயிர், சடப்பொருள், இடம், காலம், அசைவுச் சாதனம், அசைவின்மைச் சாதனம் எனும் ஆறு பொருட்களின் உறைவிடமே ஆகும். இவற்றைப் பற்றி பொய்யாமொழிப் புலவர் தம் குறட்பாக்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

உயிரும் சடமும் தத்தமக்கு ஒன்று கூடும் தன்மையன. ஏனைய நான்கு பொருட்களும் தன்னிச்சையான தன்மை கொண்டன. பல எலக்ரோன்களும், புரோசித்தன்களும் என்ற இரு அடிப்படைப் பொருட்களும் சேர்ந்து நாம் காணும் எல்லாத் தனிமங்களும் உருவாகின்றன. அத்தனிமங்கள் சேர்ந்தே பல கூட்டுப் பொருட்கள் உருவாகின்றன. அணு ஆயுதப் படைப்பே தனி அணுக்களின் சிதைவினால் தான் ஏற்படுகின்றது. இவ்வறிவியல் உண்மையை திருக்குறளும் வெளிப்படுத்தி நிற்கின்றது. உயிர் சடப்பொருள், காலம், இடம் போன்றவற்றை வெளிப்படையாகப் பேசியுள்ளார். அசைவின்மை மற்றும் அசைவிற்குரிய பொருட்களை அல்லது விடயங்களை குறிப்பால் உணரவிட்டுள்ளார்.

மேற்கூறிய அடிப்படை விளக்கம் அண்டவியலின் அடிப்படைக் கொள்கையாகும். திருக்குறள் இவ் அடிப்படைக் கொள்கையை நன்குணர்ந்தே காலமறிதல், இடமறிதல், மெய்யுணர்தல், வலியறிதல், அறம், தவம் போன்றவைகளை சிறப்பாக பேசுகின்றது. அத்துடன் சடப்பொருளின் உண்மைத் தன்மையையும், உயிருடன் அதற்குள்ள தொடர்பையும் நன்கு விளக்கியுள்ளார். இதனை “சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்ற ” என்ற குறளில் காணலாம்.

மேலும் ‘எட்வின் ஹப்பிள்’ காட்டிய விரிவடைகின்ற பிரபஞ்சம் பற்றிய தத்துவமே இந்து, புத்த மற்றும் தாவோஸிய கோட்பாடுகளில் வெவ்வேறு விதமாக விதந்துரைக்கப்பட்டுள்ளன. இதனை வள்ளுவரது “நில்லா தவற்றை நிலையின என்ற குறள் உணர்த்துகின்றது. நிலையானவை என்று நாம் பட்டியலிட்டுக் காட்டுகின்ற கோள்களும், விண்மீன்களும், அண்டங்களும் ஒன்றுமே நிலைத்து நிற்பன அல்ல. அனைத்தும் நில்லாமல் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இக் கருத்தினையே நாம் முன்னர் இயக்கவியல் சார்ந்ததாக கண்டுகொண்டோம்.

அடுத்ததாக திருக்குறளில் சந்திரவியல் குறித்த கருத்தாக்கங்களும் நிறைந்து விளங்குகின்றது. சந்திரனின் மேற்பரப்பு குன்று குழிகள் நிறைந்தது என்பது பிரபஞ் சவியல் ஆய்வின் வெளிப்பாடுகள். திருக்குறளில் இக்கருத்தின் உவமை, உருவகங்களாக எடுத்தாண்டுள்ளமை நோக்கத்தக்கது. “மதியும் மடந்தை முகனும்.....என்ற குறட்பாவில் சந்திரனை தன் தலைவியின் முகத்தினை விட தாழ்த்திப் பேச வேண்டும்

என்ற காதல் வயத்தினில் சந்திரனின் குறைபாட்டினை தலைவன் எடுத்தியம்புகின்றான். மேலும் வள்ளுவர் சந்திரனில் உள்ள வட்டக் குழிகளை அறுபட்ட பள்ளவாய்களாக கண்டு ‘அறுவாய்’ என்றொரு அருமையான கலைச் சொல்லால் சுட்டுகின்றார். இதனை “அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப்.... என்ற குறட்பாவில் காணலாம். இத்தகைய கருத்தாக்கங்களை இன்பத்துப்பாலில் மாத்திரமன்றி பொருட்பாலிலும் எடுத்தாள்கின்றார். ‘குடிமை’ என்ற அதிகாரத்தில் உயர்குடி மக்களிடம் உள்ள குற்றத்தினை விளக்குகையில் சந்திரனிடத்து விளங்கும் குற்றம் என்பதனை உவமையாகக் கையாளுகின்றார். இதனை “குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம்... குறளில் காணலாம்.

அது மாத்திரமன்றி சந்திரவியலில் முதன்மை பெறுகின்ற வளர்பிறை, தேய்பிறை ஆகிய கருத்தாக்கங்களையும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். சூரியனது ஒளியால் பூமியினது நிழல் சந்திரனில் பிரதிபலிக்கும் போது வளர்பிறையும், தேய்பிறையும் ஏற்படுவதனை வள்ளுவர் அறிவுடையார் நட்பு, பேதையர் நட்பு என்பவற்றுக்கு உவமிக்கின்றார். “நிறைநீர நீரவர் ஞ்ஞ் 79782” என்ற குறட்பாவில் அறிவுடையார் நட்பு வளர்பிறை போன்றதென்றும், பேதையர் நட்பு தேய்பிறை போன்றது என்றும் விளக்குகின்றார்.

அடுத்து சந்திரனது சலனத்தில் முதன்மை பெறுவது சந்திர கிரகணம் ஆகும். அதனையும் வள்ளுவர் தனது குறட்பாக்களிலே எடுத்தாண்டுள்ளமை நோக்கத்தக்கது. பூமியானது சந்திர சூரிய நேர்கோட்டில் பூமி குறுக்கிட்டுக் கடக்கும் போது சந்திரனில் விழும் பூமியின் நிழல் சந்திரகிரகணம் எனப்படுகின்றது. இத்தகைய பிரபஞ்சவியல் கருத்தாக்கத்தினை “கண்டது மன்னும் ஒருநாள்.... என்ற குறட்பாவில் வள்ளுவர் எடுத்தாள்கின்றார்.

வள்ளுவர் தனது குறள்களிலே கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் சுட்டுகின்ற கடவுள் ஆதி பகவன் சூரிய பகவானே என சில அறிஞர்கள் கருதுகின்றனர். இதனாலேயே பூமியில் யாரிடத்தும், எவ்வுயிரிடத்தும் விருப்பு வெறுப்பின்றி, ஒளி ஆற்றல் வழங்குகின்ற பகலவனை ‘வேண்டுதல் வேண்டாமை இலான்’ (குறள் 14) என்று அழைப்பதும் சாலப் பொருத்தமே

என்று சு.முத்து தனது வள்ளுவர் கண்ட அறிவியல் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

சூரிய மண்டலத்தில் தான் உயிரினங்கள் வாழுகின்ற புவிக்கோள் நிலைபெற்றிருக்கிறது. சூரியன் போன்றதொரு உயிருள்ள விண்மீனை பிரபஞ்சத்தில் வேறெந்த மூலையிலும் காணமுடியாது (தனக்குவமை இல்லாதான் (குறள் 17)), விண் பிரவாகக் கடலிலே உயர்வுடையவனை (அறவாழி அந்தணன் (குறள் 18)) என்றெல்லாம் பொதுமறை போற்றுவது நோக்கத்தக்கது.

அது மாத்திரமன்றி அளவிற் சிறியவன் புதன்; ஒளிமிக்கவன் வெள்ளி; சிவந்த நிறமுடையவன் செவ்வாய்; மிகப்பெரிய வடிவினன் வியாழன்; தலைமையானவன் சனி; தீமையும் இருளும் ராகு கேதுக்கள்; குளிர்ச்சிக்குத் திங்கள். இந்த எட்டுப் பண்புகளுக்கும் முதற் காரணம் சூரியன். ஆதலால் எண்குணத்தவனான ஆதவனைப் போற்றாத உயிர்வாழ்வு சிறப்புறாது. கோள் இல்லாத விண்மீனுக்கும் தான் உயிரேது. இத்தகையதொரு அர்த்தத்தினை "கோளில் பொறியில் குணமிலவே...." என்ற குறட்பாவில் வள்ளுவர் எடுத்தாள்கின்றார். அந்தவகையில் நோக்குகின்ற போது சூரிய மண்டலத்தின் நாயகனான சூரியனது சிறப்பு, இயல்பு என்பன குறித்த கருத்தாக்கங்கள் திருக்குறளில் விரவியிருப்பது கண்கூடு.

## முடிவுரை

எனவே உலகப் பொதுமறையாகிய திருக்குறளிலே பிரபஞ்சவியல் குறித்த கருத்துக்கள் முப்பாலிலும் பல்வேறான அதிகாரங்களிலும் உவமை, உருவகங்களாகவும், நேரடியாகவும் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. இக்கருத்தாக்கங்கள் யாவும் அறிவியல் வளர்ச்சி கண்ட இன்றைய பிரபஞ்சவியற் சிந்தனைகளை பிரதிபலித்து நிற்கின்றது. அறிவியல் வளர்ச்சி பெறாத காலத்தில் தோற்றம் பெற்ற பொதுமறை கண்ட சாதனைகளும் இதுவும் முதன்மைக்குரியதாகும். "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பாலிலா எப்பொருளும் இல்லை" என்ற மதுரைத் தமிழ்நாகனாரின், "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்" என்ற ஔவையின் கூற்றும் திருக்குறளின் வான்புகழை பறைசாற்றி நிற்கின்றது.

## உசாத்துணை நூல்கள்


- அருள்நந்தித் தம்பிரான் (1959) திருக்குறள் உரைக்கொத்து பொருட்பால், திருச்சி: மகரசங்கராந்தி
- தேவகுமார்.ச (1977) “அண்டவியல்”, திருக்குறளில் அறிவுத் துறைகள், (நுன. அரவிந்தன். மு.வை), சென்னை: Jain Youth Forum
- சஞ்சீவி.ந (1983) திருவள்ளுவரின் குறிக்கோளியலும், உலகப் பொதுமையியலும், சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்
- முத்து.சு (1994) வள்ளுவர் கண்ட அறிவியல், சென்னை: வானதி பதிப்பகம்
- முருகன்.ப (2001) மனம் கவர்ந்த குறள்கள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
- விசுவநாதம்.பெ (1958) திருக்குறள் கட்டுரைகள், சென்னை: பாரி நிலையம்
- வீரமணி.பா (1999) வள்ளுவரும் இயங்கியல் தத்துவ ஞானக் கூறுகளும், சென்னை: அப்பர் அச்சகம்.



**திரு.சி.நிரோசன்**

விரிவுரையாளர், மெய்யியற்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்